Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2018-20
WPP No. TN/PMG(CCR)/WPP-88/2018-20
Dated : 19-3-2019
Price : ₹ 3-00

# புதுச்சேரி மாநில அரசிதழ்

# La Gazette de L' État de Poudouchéry
# The Gazette of Puducherry

## PART - I

**சிறப்பு வெளியீடு** **EXTRAORDINAIRE** **EXTRAORDINARY**

அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority

விலை : ₹ 3-00 | Prix : ₹ 3-00 | Price : ₹ 3-00

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **எண்** | | **புதுச்சேரி** | **செவ்வாய்க்கிழமை** | **2019 ஆம்** | **மார்ச் மீ** | **19 ௳** |
| **No.** | **55** | **Poudouchéry** | **Mardi** | **19** | **Mars** | **2019 (28 Phalguna 1940)** |
| **No.** | | **Puducherry** | **Tuesday** | **19th** | **March** | **2019** |


புதுச்சேரி அரசு

### தேர்தல் துறை

*எண் தே. 47 (BE)/2019.*

*புதுச்சேரி, 2019-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19-ஆம் தேதி.*

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் கீழ்க்கண்ட அறிவிக்கை பொதுமக்கள் தகவலுக்காக வெளியிடப்படுகிறது :—

புதுதில்லி, இந்திய தேர்தல் ஆணையத்தின் 19.03.2019 தேதியிட்ட அறிவிக்கை எண் 100/PUDU-LA/1/2019.

**Dr. V. கந்தவேலு**, இ.ஆ.ப.,
தலைமைத் தேர்தல் அதிகாரி.

**இந்தியத் தேர்தல் ஆணையம்**

*நிர்வாச்சன் சதன்,*
*அசோகா சாலை,*
*புதுதில்லி-110 001,*
*தேதி 19 மார்ச், 2019/*
*28, பல்குனா, 1940 (சக).*

அறிவிக்கை

எண் 100/PUDU-LA/1/2019.— புதுச்சேரி சட்டப்பேரவைக்கு 9-தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. அசோக் ஆனந்த் அவர்கள், 1988-ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவுடன் படித்துப் பொருள் கொள்ளப்படவேண்டிய மேற்படி பிரிவின் (1)-ஆம் உட்பிரிவின் (e) பிரிவுக்கூறு மற்றும் 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 8-ஆம் பிரிவுடன் படித்துப் பொருள் கொள்ளப்படவேண்டிய இந்திய தண்டனைச் சட்டத்தின் 109 பிரிவின்கீழ் குற்றவாளியென மாண்பமை சிறப்பு நீதிபதி (புதுச்சேரி அமர்வு நீதிபதி) அவர்களால் சிறப்பு CC எண்.1/2008-இல் 30-10-2018 அன்று தீர்ப்புரைக்கப்பட்டதன் விளைவாக, அவர் தகுதியிழந்தார் என்பதன் காரணமாக, அவர் புதுச்சேரி சட்டப்பேரவையில் வகித்து வந்த சட்டப்பேரவை உறுப்பினர் பதவி 30-10-2018 முதல் காலியாகியுள்ளது என்பதாலும்;

2. அவ்வாறு ஏற்பட்ட காலியிடத்தை நிரப்பும் நோக்கத்திற்காக ஓர் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதாலும்;

3. ஆகையினால், இப்போது இந்தியத் தேர்தல் ஆணையம், ஈங்கிதனால், 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் (எண் 43/1951) 150-ஆம் பிரிவின் (1)-ஆம் உட்பிரிவு, 30 மற்றும் 56-ஆம் பிரிவுகள் ஆகியவற்றினை அடியொற்றி —

(A) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு சட்டப்பேரவையிலுள்ள மேற்சொன்ன காலியிடத்தை நிரப்பும் நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டம் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் மற்றும் ஆணைகளின் வகைமுறைகளுக்கிணங்கவும், 2019 மே மாதம் 27-ஆம் தேதிக்கு (திங்கட்கிழமை) முன்னதாகவும், ஒருவரைத் தேர்ந்தெடுக்குமாறு புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் 9-தட்டாஞ்சாவடி சட்டப்பேரவைத் தொகுதியினைக் கோருகிறது; மற்றும்

(B) மேற்சொன்ன தேர்தல் பொறுத்தவரையில்,–

| | | | |
|---|---|---|---|
| (அ) | வேட்பு மனுக்கள் செய்வதற்கான கடைசித் தேதி | : | **26.03.2019 (செவ்வாய்க்கிழமை)** |
| (ஆ) | வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யப்படும் தேதி | : | **27.03.2019 (புதன்கிழமை)** |
| (இ) | வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசித் தேதி | : | **29.03.2019 (வெள்ளிக்கிழமை)** |
| (ஈ) | வாக்கெடுப்பு அவசியமானால், அது நடத்தப்பட வேண்டிய தேதி | : | **18.04.2019 (வியாழக்கிழமை)** |
| (உ) | தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டிய தேதி | : | **27.05.2019 (திங்கட்கிழமை)** |

எனக் குறித்திடுகிறது; மற்றும்

(C) வாக்கெடுப்பு நடத்துவது அவசியமானால், தேர்தலுக்காக மேலே குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அவ்வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டிய காலம் காலை 7:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை என அறுதி செய்கிறது.

ஆணைப்படி,

**மலய் மாலிக்,**
செயலர்,
இந்தியத் தேர்தல் ஆணையம்.

GOVERNMENT OF PUDUCHERRY

**ELECTIONS DEPARTMENT**

*No. E.47/BE/2019.*

*Puducherry, the 19th March 2019.*

NOTIFICATION

The following notification is published for information to the public:—

1. Notification No. 100/PUDU-LA/1/2019, dated 19-03-2019 of the Election Commission of India, New Delhi.

Dr. **V. CANDAVELOU,** I.A.S.,
Chief Electoral Officer.

---

**ELECTION COMMISSION OF INDIA**

*Nirvachan Sadan, Ashoka Road,*
*New Delhi-110 001,*
*Dated 19th March, 2019/*
*28 Phalguna, 1940 (Saka).*

NOTIFICATION

No. 100/PUDU-LA/1/2019;— Whereas, the seat of Shri Ashok Anand, in the Legislative Assembly of the Puducherry Union Territory, elected from 9–Thattanchavady Assembly Constituency, has become vacant on 30.10.2018, due to disqualification consequent upon his conviction under the provision clause (e) of sub-section (1) of Section (13) read with sub-section (2) of Section 13 of the Prevention of Corruption Act, 1988 and section 109 of Indian Penal Code by the Hon'ble Special Judge (Principal Sessions Judge), Puducherry in Spl. CC No.1/2008 on 30.10.2018 read with section 8 of the Representation of the People Act, 1951; and

2. Whereas, a bye-election is to be held for the purpose of filling the vacancy so caused; and

3. Now, therefore, in pursuance of sub-section (1) of section 150, and sections 30 and 56 of the Representation of the People Act, 1951 (43 of 1951), the Election Commission of India hereby:—

(A) Calls upon the said 9–Thattanchavady Assembly Constituency in the Union territory of Puducherry to elect, before the 27.05.2019 (Monday) and in accordance with the provisions of the said Act and of the rules and orders made thereunder, a person, for the purpose of filling the said vacancy in the Legislative Assembly of the Union Territory; and

(B) Appoints, with respect to the said election,—

(a) the 26.03.2019 (Tuesday), as the last date for making nominations;

(b) the 27.03.2019 (Wednesday), as the date for the scrutiny of nominations;

(c) the 29.03.2019 (Friday), as the last date for the withdrawal of candidatures;

(d) the 18.04.2019 (Thusday), as the date, on which a poll shall, if necessary, be taken;

(e) the 27.05.2019 (Monday), as the date before which the election shall be completed; and

(C) Fixes the hours from 7:00 a.m. to 6:00 p.m. as the hours during which the poll shall, if necessary, be taken on the date specified above for the election.

By order,

**MALAY MALLICK,**
Secretary,
Election Commission of India.

---

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* The Director, Government Press
*Printed at:* Government Central Press, Puducherry.
*Posted at:* Puducherry HPO on every Tuesday